# பாரத சமுதாயம் - பாரதியார்



# பாரதியார்


இவ்வுலக வாழ்க்கையில்
சம்பாதித்துக் கொள்ள
வேண்டிய குணங்கள்
எல்லாவற்றிலும் மிகமிக
உயர்ந்தது பொறுமை.
- மகாகவி பாரதியார்.

# ஒப்பிலாத சமுதாயம்

- பாரத சமுதாயம் வாழ்கவே! – வாழ்க வாழ்க!
- பாரத சமுதாயம் வாழ்கவே! – ஜய ஜய ஜய (பாரத)
- முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
- முழுமைக்கும் பொது உடைமை
- ஒப்பிலாத சமுதாயம்
- உலகத் துக்கொரு புதுமை – வாழ்க! (பாரத)



# மனிதர் உணவு

- மனித ருணவை மனிதர் பறிக்கும்
- வழக்கம் இனியுண்டோ ?
- மனிதர் நோக மனிதர் பார்க்கும்
- வாழ்க்கை இனியுண்டோ ? – புலனில்
- வாழ்க்கை இனியுண்டோ ? – நம்மி லந்த
- வாழ்க்கை இனியுண்டோ ?



# பெருநாடு,

- இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
- எண்ணரும் பெருநாடு,
- கனியும் கிழங்கும் தானி யங்களும்
- கணக்கின்றித் தரு நாடு – இது
- கணக்கின்றித் தரு நாடு – நித்த நித்தம்
- கணக்கின்றித் தரு நாடு – வாழ்க! (பாரத)



# இனியொரு விதிசெய் வோம்

- இனியொரு விதிசெய் வோம் – அதை
- எந்த நாளும் காப்போம்,
- தனியொரு வனுக் குணவிலை யெனில்
- ஜகத்தினை அழித்திடு வோம் – வாழ்க! (பாரத)
- எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்
- என்றுரைத்தான் கண்ண பெருமான்,
- எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை
- இந்தியா உலகிற் களிக்கும் – ஆம்
- இந்தியா உலகிற் களிக்கும் – ஆம் ஆம்
- இந்தியா உலகிற் களிக்கும் – வாழ்க! (பாரத)



# எல்லாரும் ஓர்குலம்

- எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
- எல்லாரும் இந்திய மக்கள்,
- எல்லாரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை
- எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்
- எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
- எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க! (பாரத)
- 



நன்றி